## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

## குடியியற்கல்வி I, II

சுட்டெண் : ............................ | தரம் :- 11 | 62/T/I,II | நேரம் :- 3 மணித்தியாலம்

### குடியியற்கல்வி I

(மேலதிக வாசிப்பு நேரம் :- 10 நிமிடம்) வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கு விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக)

1. எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.
2. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
3. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

01. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ச்சி அடைவதற்கு காரணமாக அமைந்தபுரட்சி எது?
1) பிரான்சியப்புரட்சி 2) அமெரிக்கப்புரட்சி
3) ஆங்கிலப்புரட்சி 4) ரஷ்யப்புரட்சி

02. தற்கால பிரதிநிதித்துவ சனநாயக ஆட்சி முறையில் அரசியல் யாப்பில் காணப்படும் ஒரு நேரடி சனநாயக பண்பாக குறிப்பிடக்கூடிய அம்சம்
1) அமுக்கக்குழுக்கள் 2) மக்கள் தீர்ப்பு
3) தேர்தல்கள் 4) அரசியல் கட்சி முறை

03. சகலருக்கும் சமமான சந்தர்ப்பங்களையும் வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுத்தல் எவ்வாறு அழைக்கப்படும்.
1) சுதந்திரம் 2) கடமை 3) உரிமை 4) சமத்துவம்

04. இலங்கைப் பிரசையொருவர் தனது வாக்குரிமையை பயன்படுத்தும் வயதெல்லையாகக் குறிப்பிடப்படுவது அவர்
1) 18 வயதினைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.
2) 15 வயதினைப் பூரணப்படுத்தி இருக்க வேண்டும்.
3) 16 வயதினைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.
4) 21 வயதினைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

05. எந்தவித உள்ளக மற்றும் வெளியக சக்திகளால் கட்டுப்படுத்த முடியாத மக்களுக்காக பிரயோகிக்கும் அதி உயர் அதிகாரம் எவ்வாறு அழைக்கப்படும்.
1) சட்டம் 2) உரிமை 3) இறைமை 4) அரசியல் யாப்பு

06. மகிழ்ச்சிகரமானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை நோக்கமாகக் கொண்ட அமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்.
1) அரசு 2) அரசாங்கம் 3) பாராளுமன்றம் 4) நீதிமன்றம்

07. ஒற்றையாட்சி நடைபெறும் நாடு ஒன்றில் அதிகாரம் பன்முகப்படுத்தப்படுவது
1) பிரதமருக்கும் மத்திய அரசுக்குமிடையிலாகும்.
2) பிரதமருக்கும் பிராந்திய நிர்வாக அலகுகளுக்கும் இடையிலாகும்.
3) ஜனாதிபதிக்கும் பிராந்திய நிர்வாக அலகுகளுக்கும் இடையிலாகும்.
4) மத்திய அரசுக்கும் பிராந்திய நிர்வாக அலகுகளுக்கும் இடையிலாகும்.



kalvi.lk

08. சுவிட்சர்லாந்தின் கென்ரன்களுக்குரிய அதிகாரங்களில் அடங்குவது.
1) கைத்தொழில் 2) வெளிவிவகாரம்
3) தகவல் பரிமாற்றம் 4) போர்ப்பிரகடனம்

09. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபைகளின் பதவிக்காலம்
1) 6 வருடங்கள் 2) 5 ½ வருடங்கள் 3) 5 வருடங்கள் 4) 4 வருடங்கள்

10. பின்வருவனவற்றுள் பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தினைக் கொண்டிருக்கும் நாடுகளைக் குறிக்கும் விடை
1) இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் 2) இந்தியா, இலங்கை, ஐக்கிய அமெரிக்கா
3) இந்தியா, இலங்கை, பிரான்ஸ் 4) இலங்கை, ஐக்கிய அமெரிக்கா, பாகிஸ்தான்

11. பின்வருவனவற்றுள் பொருளாதாரமல்லாப் பண்டம் எது?
1) உணவு 2) உடை 3) சூரிய ஒளி 4) மருந்துப் பொருட்கள்

12. வங்களா விரிகுடாவைச் சூழவுள்ள நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு மையம் (BIMST-EC) இல் அங்கத்துவம் **பெறாத** நாடு எது?
1) இந்தியா 2) மியன்மார் 3) வங்களாதேஷ் 4) பாகிஸ்தான்

13. பொருளாதார முறையினுள் நடைபெறும் செயன்முறை ஒன்றினை, சரியான ஒழுங்கு வரிசையில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
1) உற்பத்தி, விநியோகம், நுகர்வு
2) உற்பத்தி, நுகர்வு, விநியோகம்
3) உற்பத்தி, களஞ்சியப்படுத்துதல், விநியோகம்
4) உற்பத்தி, களஞ்சியப்படுத்துதல், நுகர்வு

14. மோதல் தீர்வு முறைகளில் ஒரு தரப்பினர் மட்டும் வெற்றியடையும் (Win-lost strategy) சிறப்பியல்பினைக் கொண்ட தீர்வு முறை எது?
1) காப்பாற்றுதல் 2) கலந்துரையாடல் 3) உடன்படல் 4) இணக்கப்பாடு

15. மத்திய திட்டமிடல் சபையின் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படும் அடிப்படைப் பொருளாதார பண்பினைக் கொண்ட பொருளாதார முறை எது?
1) சமதர்மப் பொருளாதார முறை 2) கலப்புப் பொருளாதார முறை
3) முதலாளித்துவ பொருளாதாரமுறை 4) நிலைமாறும் பொருளாதார முறை

16. உற்பத்திக்காரணிகளை ஒன்று சேர்த்து உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முயற்சியாண்மை எனப்படும். இதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு
1) ஊதியம் 2) வட்டி 3) வாடகை 4) இலாபம்

17. மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணி **அல்லாதது**
1) இனப்பாகுபாடு 2) உளவியல் சூழ்நிலை
3) சமூக பொருளாதார நிலை 4) அரசியல் கருத்து முரண்பாடு

18. அயலவர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்கப் பயன்படும் மோதல் தீர்வு முறை
1) கலந்துரையாடல் 2) உடன்படல்
3) இணக்கப்பாடு 4) ஆலோசனையும் வழிகாட்டலும்

19. நல்லவற்றை ஏற்றுக்கொள்வதும் தீயவற்றை தவிர்த்துக் கொள்வதும் எவ்வாறு அழைக்கப்படும்.
1) மரபுகள் 2) பழக்க வழக்கங்கள்
3) நம்பிக்கைகள் 4) பண்பாடு

20. பின்வருவனவற்றுள் ஒற்றையாட்சி அரசுகளை மட்டும் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
1) ஐக்கிய அமெரிக்கா, யப்பான் 2) யப்பான், இந்தியா
3) இந்தியா, ஐக்கிய அமெரிக்கா 4) இலங்கை, யப்பான்

21. இலங்கையில் உயர் நீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து பிரித்தானிய உயர் நீதிமன்றமான கோமறைக்கழகத்தில் மேன்முறையீடு செய்யும் அதிகாரம் எந்த அரசியல் யாப்பின் பிரகாரம் நீக்கப்பட்டது.
1) சோல்பரி யாப்பு 2) டொனமூர் யாப்பு
3) முதலாம் குடியரசு யாப்பு 4) இரண்டாம் குடியரசு யாப்பு



பக்கம் 3 ஐப் பார்க்க

kalvi.lk

22. மக்களின் விருப்பங்களைக் கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்கு கொண்டு வரும் பிரதிநிதி அரசாங்கமாகும். இக்கருத்தைக் கூறியவர்.
1) பேராசிரியர் காணர்
2) பேராசிரியர் ஹரலட். ஜே.லஸ்கி
3) பேராசிரியர் ஐவர்.ஜெனிங்ஸ்
4) பேராசிரியர்.ஏ.வீ.டைசி

23. இலங்கையில் மாகாண மேல் நீதிமன்றத்துக்கான நீதிபதிகள் யாரால் நியமிக்கப் படுகின்றார்கள்.
1) சட்டமா அதிபர்
2) சனாதிபதி
3) பிரதமநீதியரசர்
4) நீதிச்சேவை ஆணைக்குழு

❖ **24, 25 ஆம் வினாக்களிற்கு பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடை அளிக்குக.**

A – வர்த்தகப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் அதிகாரம்.
B – அரசியல் யாப்புக்கு வியாக்கியானம் கூறும் அதிகாரம்
C – நீதிச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களை ஆராயும் அதிகாரம்.
D – பாராளுமன்ற தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்.

24. மேற்கூறப்பட்ட நீதிமன்ற அதிகாரங்களுள் மேல் நீதிமன்றத்தின் அதிகாரமாகக் குறிப்பிடக்கூடியது
1) A
2) B
3) C
4) D

25. மேற்கூறப்பட்ட நீதிமன்ற அதிகாரங்களுள் உயர்நீதிமன்றத்தின் அதிகாரமாகக் குறிப்பிடக்கூடியது
1) A
2) B
3) C
4) D

26. இலங்கையில் இரு சபைகளைக்கொண்ட பாராளுமன்றம் எந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.
1) சோல்பரி அரசியல் யாப்பு
2) டொனமூர் அரசியல் யாப்பு
3) முதலாம் குடியரசு யாப்பு
4) இரண்டாம் குடியரசு யாப்பு

27. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள (1978 ஆம் ஆண்டின் 2ம் குடியரசு யாப்பின் படி) தேர்தல் தொகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை
1) 196
2) 225
3) 198
4) 164

28. நேரடியாகவோ, அல்லது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமோ தமது நாட்டு அரசியலில் பங்குபற்றுவதற்கான உரிமைத்தொகுதிகள்
1) பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்
2) சமூக மற்றும் பொருளாதார உரிமைகள்
3) சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள்
4) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்

29. பின்வருவனவற்றுள் சட்ட ரீதியான கடமையைக் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.
1) சுற்றாடலைப் பேணிப்பாதுகாத்தல்
2) நாட்டின் வளங்களைப் பாதுகாத்தல்.
3) பொதுச்சொத்துக்களைப் பாதுகாத்தல்
4) விழுமியங்களை மதித்தலும் பின்பற்றுதலும்

30. ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனத்தில் அடங்கும் உறுப்புரைகளின் எண்ணிக்கை.
1) 27
2) 20
3) 30
4) 33



பக்கம் 4 ஐப் பார்க்க

kalvi.lk

31. பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW) ஐக்கிய நாடுகள் சபையில் இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தினமானது
1) 1979 நவம்பர் 18 2) 1979 டிசம்பர் 18 3) 1978 நவம்பர் 18 4) 1978 டிசம்பர் 18

32. அபிவிருத்தியை அளவிடப் பயன்படும் பாரம்பரிய அளவை முறைகளில் ஒன்றாக அமைவது.
1) மனித வறுமைச்சுட்டி 2) பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டி
3) பொருளாதார வளர்ச்சி வேகம் 4) பசுமை தலா தேசிய உற்பத்தி

❖ **33 ஆம், 34 ஆம் வினாக்களிற்கு பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடை அளிக்குக.**

A – புவி வெப்பமடைதல் B – வறட்சி C – பனிக்கட்டிகள் உருகுதல்
D – சூறாவளி E – காட்டுத்தீ F – பாலைவனமாதல்

33. மனிதனின் நடவடிக்கைகளினால் இயற்கைச் சூழலில் பாரிய சுற்றாடற் பிரச்சினைகளை ஏற்படுத்தும் மூன்று காரணிகள்
1) B, D, E 2) A, C, E 3) B, C, E 4) A, C, F

34. இயற்கைச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற இயற்கைக் காரணிகள் மூன்றினைக் குறிக்கும் விடை
1) B, D, E 2) D, C, F 3) A, C, F 4) C, D, E

35. மிகப்பாரிய அளவில் காடழிப்பை மேற்கொள்ளும் ஆசிய நாடு எது?
1) இலங்கை 2) மியன்மார் 3) வியட்னாம் 4) வங்களாதேஷ்

36. நிலையான அபிவிருத்தி தொடர்பான பிரசைகளின் கடமைகளின் **அடங்காதது**
1) சூழல் நேய மனப்பாங்கு விருத்தி
2) மிகை நுகர்வைத் தவிர்த்தல்
3) சுற்றாடல் சகாதாரங்களை அறிமுகம் செய்தல்
4) வளங்களை சிக்கனமாக பயன்படுத்துதல்

37. பின்வரும் எந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் (SAPTA) "சப்தா" மற்றும் சவ்ரா (SAFTA) வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன.
1) சார்க் (SAARC) 2) பிம்ஸ்ரெக் (BIMST-EC)
3) ஆசியான் (ASEAN) 4) கொழும்புத்திட்டம் (Colombo plan)

38. நாடுகளுக்கிடையில் உறவுகளைச் சிறப்பாக நடாத்திச் செல்வதற்கு பயன்படும் பிரதான ஊடகமாக விளங்குவது
1) பாதுகாப்பு அமைச்சாகும் 2) சனாதிபதி செயலகமாகும்
3) தூதுவர் சேவையாகும் 4) வெளிநாட்டு அமைச்சாகும்

39. ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு பின்வருவனவற்றுள் எது
1) செயலகம் 2) பொதுச்சபை 3) பாதுகாப்புச்சபை 4) சர்வதேச நீதிமன்றம்

40. வறுமையையும் பட்டினியையும் இல்லாதொழித்தல், பொருளாதார சமூக அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இணை நிறுவனம் எது?
1) உலக சுகாதார நிறுவனம் (WHO) 2) உலக உணவுத்திட்டம் (WFP)
3) சர்வதேச தொழிலாளர் அமையம் (ILO) 4) சர்வதேச நாணய நிதியம் (IMF)


பக்கம் 5 ஐப் பார்க்க
kalvi.lk

## பகுதி II

❖ **முதலாம் வினா கட்டாயமானது**

❖ **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

*01.* i) சனநாயக ஆட்சி நடைபெறும் ஒரு நாட்டில் அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

ii) ஐக்கிய அமெரிக்காவில் மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

iii) நாடொன்றில் சமூகநீதி சீர் குலைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

iv) முதலாளித்துவ பொருளாதார முறையின் அடிப்படைப் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

v) மனதில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகள் **இரண்டு** தருக.

vi) தேசியச் சட்டத்தின் **இரு** வகைகளைக் குறிப்பிடுக.

vii) இலங்கையில் சுற்றாடல் தொடர்பாகச் செயற்படும் நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

viii) மனித இனத்தின் நிலைப்புக்கும் சூழலின் இருப்புக்கும் அவசியமான சூழலில் இருந்து கிடைக்கும் சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

ix) உலகில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற பிராந்திய அமைப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

x) தேசிய அரசுகளின் பிரதான பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(2x10=20 புள்ளிகள்)

*02.* **"சனநாயக ஆட்சிமுறையினைச் செயற்படுத்துவதற்கு அரசியற்கட்சிகள் அவசியமானவையாகும்"**

i) அரசியற் கட்சி என்றால் என்ன. (2 புள்ளிகள்)

ii) அரசியற் கட்சி முறையின் **மூன்று** வகைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) A) சனநாயக ஆட்சியின் வெற்றிக்கு எதிர்கட்சியின் பொறுப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

B) போட்டிக் கட்சி முறையின் நன்மையான விளைவுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

*03.* **"பல்வேறு கலாசாரப் பண்புகளைக் கொண்ட சமூகமே பன்மைப் பண்பாட்டுச் சமூகம் எனப்படும்"**

i) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் சக வாழ்வுடன் செயற்படுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)



kalvi.lk

iii) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு **ஒன்றை** விளக்குக. (5 புள்ளிகள்)

பக்கம் 6 ஐப் பார்க்க

**04. “உலகப்பொருளாதாரம் ஓர் அலகாக மாற்றமடைதல் உலகமயமாதலின் சிறப்பு அம்சமாகும்”**

i) உலகமயமாதலின் விசேட பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) உலகமயமாதலை பலப்படுத்தும் நோக்கில் தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச அமைப்புக்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (3 புள்ளிகள்)

iii) உலகமயமாதல் இலங்கை மீது ஏற்படுத்திய பாதகமான தாக்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)

**05. “உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை பிரதேசமட்டத்தில் செயற்படுத்துவதையே பிரதான பணியாகக் கொண்டுள்ளன”**

i) இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) அதிகாரப் பரவலாக்கத்தின் போது ஏற்படும் பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் **மூன்று** தலைப்புக்களையும் குறிப்பிட்டு அவற்றுள் **ஒரு தலைப்பின்** கீழ் ஆற்றப்படும் பணிகளை விளக்குக. (5 புள்ளிகள்)

**06. “சூழல் என்பது உயிருள்ள, உயிரற்ற கூறுகளின் தொகுதியாகும்”**

i) சமூகச்சூழலின் பௌதிகக் கட்டமைப்பில் உள்ளடங்கும் மனிதனின் தலையீட்டினால் கட்டியெழுப்பப்பட்ட **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) இயற்கைச் சூழலில் நீர் மாசடைவதினால் ஏற்படும் பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) இயற்கை சூழற்தொகுதியில் கற்கோளம் பாதிக்கப்படுவதனால் ஏற்படும் விளைவுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (5 புள்ளிகள்)

**07. “நாடுகளுக்கிடையில் இடம்பெறும் அனைத்து விதமான உறவுகளும் சர்வதேச உறவுகள் எனப்படும்”**

i) சர்வதேச உறவுகள் மேற்கொள்ளப்படும் பிரதானமான **இரு** முறைகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) சர்வதேச உறவுகளின் நோக்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) சர்வதேச உறவுகள் வளர்ச்சி அடைவதில் தாக்கம் செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page